# ஏர்க்களம்

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# வேளாண்மை அறிவியல் நிலையம்
## விருத்தாசலம் - கடலூர் மாவட்டம்

பாகூஅநுப
ICAR

ஜுலை – செப்டம்பர், 2018

சிறப்பு ஆசிரியர்
முனைவர். ஹெ. பிலிப்
விரிவாக்க கல்வி இயக்குனர்

ஆசிரியர்
முனைவர். சு.கண்ணன்
திட்ட ஒருங்கிணைப்பாளர்

இணை ஆசிரியர்
முனைவர். க.நடராஜன்
உதவி பேராசிரியர் (விதை அறிவியல்)

ஆசிரியர் குழு
முனைவர். த. மருதாசலம்
முனைவர். அ. இரமேஷ் குமார்
முனைவர். க. வேங்கடலட்சுமி

தொழில்நுட்ப உதவிக் குழு
திருமதி. க. மீனலட்சுமி
திரு. த. குமார்
திரு. மா. செல்வி

**அன்பார்ந்த உழவர் பெருமக்களே!**
**வணக்கம்.**

கடலூர் மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் 5 வயல்வெளி ஆய்வையு 20 முதல்நிலை செயல்விளக்கத்திடல்களையும் இந்த காலாண்டில் நடத்தி வருகிறோம். நெற்பயிரின் புதி இரகமான கோ 52, டி.கே.ம் 13, நிலக்கடலையில் வி.ஆர்ஐ 8, பண்ணைக்குட்டையில் கூட்டுக்கெண்டை மீ வளர்ப்பு மற்றும் நெல், நிலக்கடலை, முந்திரி, கத்தரி, வெண்டை பயிர்களில் பயிர் மேலாண்மை மற்றும் பயி பாதுகாப்பு முறைகளைப் பற்றி செயல் விளக்கத்திடல்கள் நடத்தி வருகிறோம். நமது நிலையத்திலும் பல்வேறு செயல்விளக்கத்திடல்கள் அமைத்து நிலையப்பயிற்சி மற்றும் களப்பயிற்சிகளையும் சிறப்பாக நடத்தி வருகிறோம். இந்த காலாண்டில் எமது செயல்பாடுகள் குறித்து சுருக்கமாக விவரித்துள்ளோம். எனவே உழவர்கள் அனைவரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் இணைந்து விளைச்சலை பெருக்கி வருமானத்தை அதிகப்படுத்துவோம் என இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறோம்.

அன்புடன்
ஆசிரியர் குழு



## கடலூர் மாவட்டத்தில் நெல்லில் புதிய இரகமான கோ 52 விதை உற்பத்தி பரவலாக்கம் குறித்த முதல்நிலை செயல்விளக்கம்

வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பாக 2018-19 ம் ஆண்டு திட்ட அறிக்கையின் படி நெல்லில் புதிய இரகமான கோ 52 மணிகுடியான் இருப்பு மற்றும் அகரம் ஆலம்பாடி கிராமத்தில் 10 செயல்விளக்கத்திடல் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு செயல்விளக்கத்திடலுக்கும் 30 கிலோ கோ 52 நெல் வழங்கப்பெற்றது. செயல்விளத்தத்திடலை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஓழுங்கிணைப்பாளர் முனைவர். **S.** கண்ணன் மற்றும் உதவிப்பேராசிரியர்கள் முனைவர்.**K.** நடராஜன் (விதை நுட்பவியல்), முனைவர் **S.**மருதாசலம், அவர்கள் 24.8.18 அன்று ஆய்வு செய்தனர். ஆய்வின்போது உதவிப் பேராசிரியர் முனைவர். **K.** நடராஜன் அவர்கள் விதை உற்பத்தி மற்றும் பராமரிப்பு முறைகளை உழவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும், விதைகளை அடுத்த பருவத்துக்கும் உற்பத்தி செய்து பரவலாக்கம் செய்யுமாறு உழவர்களுக்கு எடுத்துரைத்தார்.



## கடலூர் மாவட்டத்தில் நெல்லில் புதிய இரகமான டி.கே.ம் 13 விதை உற்பத்தி பரவலாக்கம் குறித்த முதல்நிலை செயல்விளக்கம்



வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பாக 2018-19 ம் ஆண்டு திட்ட அறிக்கையின் படி நெல்லில் புதிய இரகமான டி.கே.ம் 13 மணிகுடியான் இருப்ப மற்றும் ஆழிச்சிகுடி கிராமத்தில் 10 செயல்விளக்கத்திடல் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு செயல்விளக்கத்திடலுக்கும் 30 கிலோ டி.கே.ம் 13 நெல் வழங்கப்பெற்றது. செயல்விளத்தத்திடலை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஓழுங்கிணைப்பாளர் முனைவர். **S.** கண்ணன் மற்றும் உதவிப்பேராசிரியர்கள் முனைவர்.**K.** நடராஜன் (விதை நுட்பவியல்), முனைவர் **S.**மருதாசலம், அவர்கள் 24.8.18 அன்று ஆய்வு செய்தனர். ஆய்வின்போது உதவிப் பேராசிரியர் முனைவர்.மு. நடராஜன் அவர்கள் விதை உற்பத்தி மற்றம் பராமரிப்பு முறைகளை உழவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும், விதைகளை அடுத்த பருவத்துக்கும் உற்பத்தி செய்து பரவலாக்கம் செய்யுமாறு உழவர்களுக்கு எடுத்துரைத்தார்.



## கோடையில் இறவை பாசனத்திற்கு ஏற்ற மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்புத்திறன் உள்ள உளுந்து இரகத்தை பரிசோதித்தல்.



குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் அயன்குறிஞ்சிப்பாடி கிராமம் உள்ளிட்ட 10 உழவர்களுக்கு கோடைக்கு ஏற்ற மஞ்சள் நோய்க்கு எதிர்ப்புதிறன் உள்ள உளுந்து இரகத்தினை தேர்ந்தெடுப்பதற்காக வயல்வெளி ஆய்வினை மேற்கொண்டனர். இதில் ஏடீடி 5 மற்றும் பியூ 31 இரகங்கள் பயிரிடப்பட்டன. வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் முனைவர். க. வேங்கடலெட்சுமி, முனைவர். மருதாசலம் மற்றும் முனைவர் நடராஜன் உள்ளிட்டோர் மஞ்சள் தேமல் நோய் தாக்குதல் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.



## பண்ணை குட்டைகளில் கூட்டு கெண்டை மீன் வளர்ப்பு



வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பாக சத்தியவாடி, ஆலிச்சிக்குடி ஆலடி ஆகிய கிராமங்களில் 10 செயல்விளக்கத்திடல் அமைக்கப்பட்டது. இந்த செயல் விளக்கத்தில் பண்ணை குட்டைகள் தேர்வு செய்து மின் மீன் குஞ்சுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மீன் இரகங்களான கட்லா, ரோகு, மிர்கால், புல் கெண்டை, காமண் கார்யு, பொட்லா ஆகிய இரகங்கள் வழங்கப்பட்டது. இதன் வளர்ப்பு முறை, பராமரிப்பு, நோய் மேலாண்மை, மீன் உணவில் முக்கியத்துவம் பற்றி திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கண்ணன் உரையாற்றி மீன் குஞ்சுகள் பண்ணைகளில் விடப்பட்டது. சத்தியவாடி, ஆலிச்சிக்குடி ஆலடி ஆகிய கிராமங்களில் செயல்விளக்கம் நடைபெறுகிறது.



## எண்ணெய்வித்து பயிர்களில் விதைஉற்பத்தி மற்றும் பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி



விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் எண்ணெய்வித்து பயிர்களில் விதை உற்பத்தி மற்றும் பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்த ஒருநாள் பயிற்சி 26.6.2018 அன்று நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மைஅறிவியல் நிலையதிட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். சு. கண்ணன் அவர்கள் தலைமை தாங்கி துவக்க உரையாற்றினார். மேலும் இப்பயிற்சியில் உதவிப் பேராசிரியர் முனைவர். க. நடராஜன் (விதை நுட்பவியல்) அவர்கள் எண்ணெய் வித்து பயிர்களில் விதைஉற்பத்தி முறைகள், இரகங்கள் மற்றும் பயிர் மேலாண்மை தொழில் நுட்பங்கள் பற்றி விளக்கினார். மேலும் இப்பயிற்சியில் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு களைக்கொல்லி உபயோகிப்பது பற்றி செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். இச்செயல் விளக்கத்தை தனுகா கம்பெனி பிரைவேட் லிமிடெட் அவர்களால் செய்யப்பட்டது. இப்பயிற்சியில் சுமார் 60 உழவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.



## மஞ்சள் -சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி



விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பாக கடலூர் மாவட்டம் மங்களூர் வட்டாரம் எஸ். நரையூர் கிராமத்தில் “மஞ்சள் சாகுபடி தொழில் நுட்பங்கள்” பயிற்சி 06.07.2018 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சு. கண்ணன் தலைமை தாங்கினார். அவர் தம் உரையில் மஞ்சள் சாகுபடியாளர் சங்கம் அமைத்து குழுவாக சாகுபடி, விற்பனை செய்வதன் நன்மைகள் குறித்தும் அறுவடையில் இயந்திரப்பயன்பாடு, மஞ்சள் வேகவைத்து, பளபளப்பு இயந்திர பயன்பாடு குறித்து எடுத்துரைத்தார்.

உயர் விளைச்சல் இரகங்கள், தரமான கிழங்கு தேர்வு, விதை கிழங்கு நேர்த்தி, நிழல் மேலாண்மை, பேரூட்ட, நுண்ணூட்ட சத்து மேலாண்மை, களை மேலாண்மை, சொட்டு நீர் பயன்பாடு, அறுவடை பின்செய் நேர்த்திகள் குறித்து தோட்டக்கலை விஞ்ஞானி முனைவர் அ. இரேமஷ் குமார் பயிற்றுவித்தார். மஞ்சள் பயிரைத் தாக்கும் நோய்கான கிழங்கு அழுகல், இலைப்புள்ளி, இலைக்கருகல் நோய்கள் பூச்சிகளான தண்டு துளைப்பான், சாறு உறிஞ்சும் பூச்சிகளின் அறிகுறிகள் மற்றும் அதன் மேலாண்மை குறித்து பயிர் நோயியல் விஞ்ஞானி முனவைர் சு. மருதாச்சலம் விளக்கமளித்தார். மேலும் மஞ்சள் சாகுபடிக்கான மண் நீர் ஆய்வின் அவசியம் குறித்தும் “உழவரின் வளரும் வேளாண்மை” சந்தா விபரம் குறித்தும் தொழில் நுட்ப உதவியாளர் க. மீனலட்சுமி எடுத்துரைத்தார். தோட்டக்கலைத்துறையின் திட்டங்கள் குறித்து உதவி தோட்டக்லை அலுவலர்கள் திரு. செல்வக்குமார், திரு. கோவிந்தராஜ், திரு. சாமிநாதன் ஆகியோர் விளக்கினர். இப்பயிற்சியில் மங்களூர் வட்டாரத்தைச் சேர்ந்த மஞ்சள் விவசாயிகள் 50 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



## பிரதம மந்திரியின் காணோலி காட்சியின் மூலம் மகளிர் சுய உதவி குழுவுடன் கலந்துரையாடல்



பிரதம மந்திரியின் காணோலி காட்சியின் மூலம் மகளிர் சுய உதவி குழுவுடன் கலந்துரையாடல் 12.07.2018 அன்று விருத்தாசலம், வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 116 பண்ணை மகளிர் மற்றும் சுய உதவி குழுவும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பிரதம மந்திரியின் உரை காணோலி கண்காட்சி மூலம் பயனாளிகளுக்கு ஒளிப்பரப்பட்டது. பல திட்டங்கள் பற்றியும், மகளிர் குழுவினரும் தொழில் முனைவோரான வெற்றி கதைகள் பற்றியும் கலந்துரையாடல் நடைபெற்றது. பின்பு இதன் தொடர்ச்சியாக காய்கறி மற்றும் பழங்களில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி நடைபெற்றது. ஊறுகாய், ஜாம், ஜீஸ் தயாரிக்கும் முறையை வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாள் முனைவர். சு. கண்ணன் எடுத்துரைத்தார். தயாரிக்கும் முறைகள் செயல் விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது.

